# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021

## திருவள்ளூர் மாவட்டம்

### மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி

நாள் : 09.03.2021

# மண்டல அலுவலர்கள் நியமனம்

- ஒரு மண்டலத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/துணை வட்டாட்சியர்கள் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் / வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒரு மண்டலத்தில் மண்டல அலுவலருக்கு உதவியாக உதவி மண்டல அலுவலர் மற்றும் அலுவலக உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- ஒவ்வொரு மண்டல அலுவலருக்கும் தேர்தல் பணிக்காக வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளது.

- தேர்தல் நாள் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து தேர்தல் நடைமுறைகள் முடியும் வரை சம்பந்தப்பட்ட மண்டலத்திற்கு மண்டல அலுவலரே முழுப்பொறுப்பாவார்.

# உடனடியாக மேற்கொள்ளவேண்டிய பணிகள்

- **சோதனை ஓட்டம் -** மண்டல அலுவலர்கள் விநியோக மையத்திலிருந்து(Distribution Centre) முதல் வாக்குச்சாவடி (தொடங்கும் இடம்) மற்றும் எண்ணிக்கை மையம் (முடியும் இடம்) வரை சென்று மண்டல வழித்தட வரைபடம், நேரம் ஆகியவற்றை சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

- வாக்குச்சாவடிகளில் தேவையான அடிப்படை வசதிகளான கழிவறைகள், குடிநீர், சாய்தளம், மின்வசதி, மின்சாரம் இல்லாத நேரங்களில் அதற்கான மாற்று ஏற்பாடுகள், மேஜைகள், நாற்காலிகள், மின்விசிறிகள், குழல் விளக்குகள் அதற்கான இணைப்புகள், மேல்தளம், தரை, சுவர் ஆகியவை வாக்குசாவடிகளுகக் தேவையான முறையில் உள்ளதா என ஆய்வு செய்யப்பட வேண்டும்.
- அடிப்படை வசதிகளான கழிவறைகள், குடிநீர் வசதி, மின் வசதி, சாய்தளம் ஆகியவை இல்லாத வாக்குச்சாவடிகளின் விபரங்களை உடன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உரிய படிவத்தில் அளித்து குறைபாடுகளை 18.03.2021 க்குள் சரி செய்ய வேண்டும்.

# தேர்தல் வகுப்பு

- முதல் கட்டமாக நடைபெறும் தேர்தல் வகுப்பில் தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தல் நடத்துவது குறித்த பயிற்சி அளித்திட வேண்டும். மேலும் தேர்தல் அலுவலர்கள் அஞ்சல் வழி வாக்குகள் அளித்திட ஏதுவாக **படிவம்-12** வழங்கி பூர்த்தி செய்யப்பட்ட பின் திரும்ப பெற வேண்டும்.

- பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சுருக்க விவரத்துடன் (**Abstract**) ஒப்படைக்க வேண்டும்.

- அனைத்து மண்டல அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட Presiding Officer மற்றும் Polling Officers ஆகியோர்களை கொண்டு **Whatsapp Group** ஒன்று ஏற்படுத்தவேண்டும். அதில் முக்கிய தகவல்கள் அனைத்தும் உடனுக்குடன் பதிவிட/பரிமாற வேண்டும்.

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

- ஒவ்வொரு வாக்குச்சாவடி வாரியாக விநியோகிக்கப்பட வேண்டிய பொருட்களை வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன் பெற்றுக் கொள்ள வேண்டிய பொருட்கள் மற்றும் **Reception Center-ல்** ஒப்படைக்க வேண்டிய பொருட்கள் குறித்து நன்கு படித்து தெரிந்து கொள்ளவும்.
- பயிற்சி மையத்தில் வாக்குச்சாவடிக்குரிய பணியாளர்களின் **நியமன ஆணைகளை** தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து காலை 7.00 மணிக்கு பெற்றுக் கொள்ளல்.
- காலை 8.00 மணி முதல் 10.00 மணிக்குள் வாக்குச்சாவடிக்குரிய பணியாளர்களின் நியமன ஆணைகளை அன்று வகுப்பறையில் குழு வாரியாக விநியோகித்து அதில் எவரேனும் வராமல் இருப்பின் வட்டாட்சியர் உதவியுடன் Reserve List-லிருந்து வரிசைக்கிரமப்படி மாற்று நபரை நியமித்தல். அனைத்து வாக்குச்சாவடி பணியாளர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்குதல்

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

- நண்பகல் 12.00 மணிக்கு Distribution Centre லிருந்து EVMs, வாக்குச்சாவடிக்கு தேவையான பொருட்கள் மற்றும் Reserve EVMs ஆகியவற்றை வாக்குச்சாவடி வாரியாக சரிபார்த்து பெற்றுக்கொள்ளுதல் அவ்வாறு EVM களை பெறும் போது அவை அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு உரியதுதானா? என்பதை திறந்து பார்த்து வரிசை எண்களை உறுதி செய்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

- சுமையுந்து வாகனங்களில் வாக்குப்பதிவு பொருட்களை ஏற்றுதல். இறுதியாக செல்லவேண்டிய வாக்குச்சாவடிக்குரிய பொருட்களை சுமையுந்தின் உட்புறத்திலும் முதலில் செல்லவேண்டிய வாக்குச்சாவடிக்குரிய பொருட்களை சுமையுந்தின் முதலில் இருக்கின்ற வகையிலும் ஏற்ற வேண்டும்.

- வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் கோவிட்-19 பாதுகாப்பு தொடர்பான அனைத்து பொருட்களையும் அதற்குரிய வாகனத்தின் விவரங்களையும் சரிபார்த்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

- அதன்பின் பிற்பகல்1.00 மணி முதல் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள Mobile Party உடன் தங்களது வாக்குச்சாவடிகளுக்கு சென்று EVM and Polling Materials களை சரிபார்த்து ஒப்புகை பெற்று வழங்க வேண்டும்.

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

**கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் :**

- வாக்குச்சாவடிகளிலிருந்து 100 மீட்டர் மற்றும் 200 மீட்டர் **எல்லைக்கோடு** வரையப்பட்டுள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.
- வாக்குச்சாவடிகளின் அமைவிடத்தை **வழிகாட்டும் அறிவிப்பு பலகைகள் (Sign Boards)** வைக்கப்பட்டுள்ளதா என உறுதிசெய்திட வேண்டும்.
- வாக்குச்சாவடி வாரியாக வழங்கப்படும் Control Unit, Ballot Unit or Units, VVPAT ஆகிய கருவிகளின் வரிசை எண்ணை கவனமாக சரிபார்த்து உறுதிபடுத்திய பின்னரே வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கு வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வழங்கப்பட்டுள்ள பொருட்கள் குறித்து பட்டியலினை வைத்து சரிபார்த்தல்.

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

## சக்கர நாற்காலிகள்

வாக்குச்சாவடி மையங்களில் அமைந்துள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை அடிப்படையில் சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.

| வ. எண் | வாக்குச்சாவடி மையங்களில் அமைந்துள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை | வழங்கப்படும் சக்கர நாற்காலிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 1 முதல் 2 வாக்குச்சாவடிகள் | 1 சக்கர நாற்காலி |
| 2. | 3 முதல் 5 வாக்குச்சாவடிகள் | 2 சக்கர நாற்காலிகள் |
| 3. | 6 முதல் 8 வாக்குச்சாவடிகள் | 3 சக்கர நாற்காலிகள் |
| 4. | 9 முதல் 10 வாக்குச்சாவடிகள் | 4 சக்கர நாற்காலிகள் |
| 5. | 10 வாக்குசாவடிகளுக்கு மேல் | 5 சக்கர நாற்காலிகள் |

வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் மேற்காணும் விவரப்படி வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகளை வாக்கு எண்ணும் மையத்தில் அதற்கென நியமிக்கப்பட்டுள்ள அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

- வாக்குப்பதிவிற்கு முந்தைய நாளன்று இரவு அனைத்து வாக்குப்பதிவு அலுவலர்களின் வருகை, தேவையான Polling Materials இருப்பு வாக்குச்சாவடியில் தேவையான அடிப்படை வசதிகள் Micro Observer and Web Casting Person வருகை ஆகியவற்றை தவறாமல் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- Web Camera சரியான இடத்தில் சரியான நிலையில் அனைத்து வாக்குப்பதிவு நடைமுறைகளையும் கண்காணிக்கும் வகையில் பொருத்தப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.(Voting Compartment-ன் வெளிப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குச்சாவடியின் எண்,தேர்தல் விவரம் தெளிவாக தெரிய வேண்டும்).

- **கண்டிப்பாக Web Camera வினை வாக்காளர் யாருக்கு வாக்கு செலுத்துகிறார் (Secrecy of Voting) என்பதை படம் பிடிக்கும் படி பொருத்தக் கூடாது.**

- மேற்கண்ட இனங்களில் ஏதேனும் தாமதமோ அல்லது விடுபாடோ இருப்பின் உடனடியாக உதவி தேர்தல் நடத்தும் அலுவலரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

# தேர்தலுக்கு முந்தைய நாள் பணிகள் (05.04.2021)

- வாக்குப்பதிவிற்கு முந்தைய நாளன்று இரவு முக்கியமான படிவங்களில் நிரப்பப்பட வேண்டியவற்றை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் நிரப்புவதை உறுதி செய்தல். இதனை அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் நேரில் சென்று கண்காணிப்பது நன்று. இதன்மூலம் வாக்குப்பதிவு நிறைவடைந்தவுடன் இதர பணிகள் எளிதில் நிறைவு பெறும்.

- தங்களது EDC-ஐ பாதுகாப்பாக வைத்திருந்து ஏதாவது ஒரு வாக்குச்சாவடியில் தவறாமல் வாக்களிக்க வேண்டும்.

# வாக்குப்பதிவு நாள்(06.04.2021) அன்றைய பணிகள்

- வாக்குப்பதிவு நாளன்று காலை 4.30 மணியளவில் அனைத்து வாக்குச்சாவடிகளின் வாக்குப்பதிவு அலுவலர்களை தயார்படுத்த வேண்டும். இதற்கென அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் நேரில் சென்று பார்வையிடுவது நல்லது. இதன் மூலம் காலை 5.00 மணிக்குள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் Polling Personnel, Micro Observer, Web Casting Person வருகையினை உறுதி செய்து கொள்ளலாம்.

- மேலும் கோவிட்-19 தொடர்பாக தெர்மல் ஸ்கேனர்/சானிடைசர் பயன்படுத்துதல் மற்றும் கையுறைகள் விநியோகம் செய்யும் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ள இரு பணியாளர்கள் காலை 6.00 மணிக்குள் வந்துள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உரிய நேரத்தில் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு துவங்கப்படுவதை உறுதி செய்தல்.

# வாக்குப்பதிவு நாள் பணிகள் (06.04.2021)

- வாக்குப்பதிவு நாளன்று காலையில் வாக்குப்பதிவு துவங்குவதற்கு சுமார் 1 ½ மணி நேரத்திற்கு (காலை 5.30 மணி) முன்னரே வாக்குப்பதிவு இயந்திரங்களை அவற்றிற்கான பெட்டிகளில் இருந்து வெளியே எடுத்து அவற்றிற்குரிய கேபிள்களை முறைப்படி பொருத்த வேண்டும். கேபிள்கள் முற்றிலும் பொருத்தப்படும் வரை CONTROL UNIT SWITCH OFF செய்து வைத்திருக்க வேண்டும். BVC என்பதை நினைவில் வைத்துக் கொண்டால் முதலாவது Ballot Unit கேபிளை VVPAT உடனும் VVPAT கேபிளை Control Unit உடனும் இணைக்க வேண்டும்.

# EVM பொருத்தும் முறை



# வாக்குப்பதிவு நாள் பணிகள் (06.04.2021)

- ஏற்கனவே தெரிவித்தவாறு அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றி காலை 6.45க்குள் **மாதிரி வாக்குப்பதிவு** முடிவு பெற்றதை கைபேசி மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு **மாதிரி வாக்குப்பதிவு** நிறைவு பெறாத வாக்குச்சாவடிகளுக்கு நேரில் உடனடியாக செல்லவும்.
- காலை 7.00 மணிக்கு அனைத்து வாக்குச்சாவடிகளிலும் முறையான வாக்குப்பதிவு துவங்கியதை உறுதி செய்து கொள்ளவும்.
- வாக்குப்பதிவு துவங்கிய முதல் ஒரு மணி நேரத்தில் அனைத்து EVM இயந்திரங்களும் முறையாக செயல்படுகிறதா என்பதை நேரில் அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் சென்று தவறாமல் பார்வையிடவும்.
- காலை 9.00 மணியிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவான விவரங்களை அனைத்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும் **Booth App** ல் பதிவு செய்வதை உறுதி படுத்தவும்.



# வாக்குப்பதிவு நாள் பணிகள் (06.04.2021)

- கோவிட் 19 பாதுகாப்பு தொடர்பான வாக்குச்சாவடிகளில் சேகரிக்கும் Bio Medical Waste பொருட்களை அதற்குரிய வாகனத்தை பயன்படுத்தி அதனை ஒப்படைக்க வேண்டிய குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பாதுகாப்பான முறையில் தொடர்புடைய பணியாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

- அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் அவர்களுக்கான மதிப்பூதியத்தினை ஒப்புகை பெற்றுக் கொண்டு வழங்கிட வேண்டும்.

# வாக்குப்பதிவின் போது EVM பழுதடைய நேரிட்டால் செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை

- மாதிரி வாக்குப்பதிவிற்கு முன்னரோ அல்லது மாதிரி வாக்குப்பதிவின் போதோ CU அல்லது BU, VVPAT கருவி ஏதேனும் பழுதடைந்தால் பழுதடைந்த கருவியை மட்டும் மாற்றினால் போதுமானது. மொத்த EVM தொகுப்பையும் மாற்ற வேண்டிய அவசியமில்லை.

- காலை 7.00 மணிக்கு பின் முறையான வாக்குப்பதிவின் போது CU அல்லது BU கருவி பழுதாகும் பட்சத்தில் மொத்த மின்னணு இயந்திர தொகுப்பையும் (அதாவது CU, BU மற்றும் VVPAT ) மாற்றி, புதிய மின்னணு இயந்திர தொகுப்பினை பயன்படுத்த வேண்டும். அவ்வாறு புதிய மின்னணு இயந்திரங்களை பயன்படுத்தும் போது மீண்டும் ஒரு முறை மாதிரி வாக்குப்பதிவினை நடத்த வேண்டும். முறையான வாக்குப்பதிவின் போது CU அல்லது BU மாற்றம் செய்து பயன்படுத்தும் தருணத்தில் புதிதாக மேற்கொள்ளும் மாதிரி வாக்குப்பதிவின் போது வேட்பாளர்களுக்கு ஒரு வாக்கு வீதம் பதிவு செய்து மாதிரி வாக்குப்பதிவு நடத்தினால் போதுமானது.

# வாக்குப்பதிவின் போது EVM பழுதடைய நேரிட்டால் செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை

- காலை 7.00 மணிக்கு பின் முறையான வாக்குப்பதிவின் போது VVPAT இயந்திரம் மட்டும் பழுதடைந்தால், அதனை மட்டும் தனியாக மாற்றி, புதிய VVPAT இயந்திரத்தை பயன்படுத்தலாம். மொத்த EVM தொகுப்பையும் மாற்ற வேண்டிய அவசியமில்லை. அப்போது மாதிரி வாக்குப்பதிவு நடத்தக்கூடாது.

- Control Unit-ல் "Link Error" என திரையில் வரப்பெறின்: VVPAT மற்றும் BU கருவிகள் முறையாக இணைக்கப்படவில்லை என பொருள்படும். மீண்டும் ஒருமுறை சரியாக இணைக்கப்பட வேண்டும்.

# வாக்குப்பதிவின் போது EVM பழுதடைய நேரிட்டால் செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை

- CU-ல் "Ballot" பட்டனை அழுத்திய பின்னர் வாக்காளர் Ballot Unit-ல் தனது வாக்கினை பதிவு செய்த பின்னர் VVPAT கருவியில் எவ்வித Paper Slip வரவில்லை என வாக்காளர் தெரிவிக்கும் சூழலில்:

- Control Unit-ல் Busy Lamp ஒளிராமலும், திரையில் எவ்வித Error Message வரப்பெறாமலும் இருப்பின் அப்புகார் ஆதாரமற்றது என முடிவு செய்யலாம்.

- Control Unit-ல் Busy Lamp தொடர்ந்து ஒளிரும் பட்சத்தில், ஆனால் திரையில் எவ்வித Error Message வரப்பெறாமலும் இருப்பின் அவ்வாக்காளரை மீண்டும் சரியான முறையில் Ballot Unit-ல் தனது வாக்கினை செலுத்த அனுமதிக்கலாம்.

# வாக்குப்பதிவின் போது EVM பழுதடைய நேரிட்டால் செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை

- CU-ல் "Ballot" பட்டனை அழுத்திய பின்னர் வாக்காளர் Ballot Unit-ல் தனது வாக்கினை பதிவு செய்த பின்னர் VVPAT கருவியில் Paper Slip தெரிந்து அது முழுமையாக துண்டாகாமல் Paper Slip Compartment ல் விழாமல் தொங்கி கொண்டிருக்கும் சூழலில்:

- மேற்படி சூழலில் Control Unit-ல் Busy Lamp தொடர்ந்து ஒளிரும் பட்சத்தில் Paper Slip முழுமையாக துண்டாகாமல் Paper Slip Compartment ல் விழாமல் தொங்கி கொண்டிருப்பதை உறுதி செய்யவும். பின்னர் அந்த VVPAT கருவியினை மட்டும் மாற்றி, புதிய VVPAT கருவியினை இணைக்கவும். மேற்கண்ட வாக்காளரின் வாக்கு Control Unit-ல் பதிவாகியிருக்காது. எனவே, அவரை மீண்டும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக Presiding Officer Diary-ல் நிகழ்வு நடந்த நேரம், சம்மந்தப்பட்ட வாக்காளரின் பெயர், பாகம் எண், வரிசை எண், நிகழ்விற்கு முன்பாக பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் புதிய VVPAT கருவி பொருத்தப்பட்ட பின் அந்த வாக்காளர் தனது வாக்கினை மீண்டும் பதிவு செய்தாரா இல்லையா என்ற விவரம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

# வாக்குப்பதிவின் போது EVM பழுதடைய நேரிட்டால் செய்ய வேண்டியவை மற்றும் செய்யகூடாதவை

- CU-ல் "Ballot" பட்டனை அழுத்திய பின்னர் வாக்காளர் Ballot Unit-ல் தனது வாக்கினை பதிவு செய்த பின்னர் VVPAT கருவியில் Paper Slip தெரிந்து அது முழுமையாக துண்டாகாமல் Paper Slip Compartment ல் விழாமல் தொங்கி கொண்டிருக்கும் சூழலில்:

- மேற்படி சூழலில் Control Unit-ல் Busy Lamp தொடர்ந்து ஒளிரும் பட்சத்தில் Paper Slip முழுமையாக துண்டாகாமல் Paper Slip Compartment ல் விழாமல் தொங்கி கொண்டிருப்பதை உறுதி செய்யவும். பின்னர் அந்த VVPAT கருவியினை மட்டும் மாற்றி, புதிய VVPAT கருவியினை இணைக்கவும். மேற்கண்ட வாக்காளரின் வாக்கு Control Unit-ல் பதிவாகியிருக்காது. எனவே, அவரை மீண்டும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக Presiding Officer Diary-ல் நிகழ்வு நடந்த நேரம், சம்மந்தப்பட்ட வாக்காளரின் பெயர், பாகம் எண், வரிசை எண், நிகழ்விற்கு முன்பாக பதிவான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை மற்றும் புதிய VVPAT கருவி பொருத்தப்பட்ட பின் அந்த வாக்காளர் தனது வாக்கினை மீண்டும் பதிவு செய்தாரா இல்லையா என்ற விவரம் ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்.

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 1. | வாக்குப்பதிவு நாளன்று காலை Polling Personnel/ Web Casting Person / Micro Observer/ BLO எவரேனும் வராமல் இருத்தல். | வட்டாட்சியர் மூலம் உடனடியாக Reserve List- லிருந்து பணியாளரை பெற்று பணியமர்த்தல் | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |
| 2. | காலை 5.45 மணிக்கு மாதிரி வாக்குப்பதிவிற்கு தயாராகும் போது EVM-களில் பழுது ஏற்பட்டுள்ளதாக தகவல் பெறுதல் | VVPAT கருவியின் பின்புறமுள்ள Transportation Switch செங்குத்தான நிலையில் வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தல்.<br><br>அனைத்து EVMs கருவிகளும் முறையாக இணைக்கப்பட்டுள்ளதை மீண்டும் ஒருமுறை சரிபார்த்து CU-வை “OFF” செய்து மீண்டும் “ON” செய்யுமாறு அறிவுறுத்தல்.<br><br>மேற்கண்ட வழிகளை பின்பற்றிய பின்னரும் பழுதுகளை நீக்க இயலாத நிலையில் பழுது ஏற்பட்ட கருவியை மட்டும் தனியே மாற்றி வழங்கவும். | EVM கருவியை மாற்றும் பட்சத்தில் வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 3. | வாக்குச்சாவடிக்கு ஒதுக்கப்பட்ட EVM இயந்திரங்களின் வரிசை எண் மாறியுள்ளதாக முகவர்கள் புகார் தெரிவிப்பதாக தகவல் பெறுதல். | Second Randomization-ன் போது வாக்குச்சாவடிக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து CU, BU, VVPAT குறித்த விவரங்கள் ஏற்கனவே அந்தந்த வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டதையும், அவற்றுள் Candidate Setting-ன் போது பழுதடைந்த கருவிகளுக்கு மாற்றாக Reserve EVM களிலிருந்து எடுக்கப்பட்டு அந்த வாக்குச்சாவடிக்கு வழங்கப்பட்டதையும், இந்த விவரங்களும் ஏற்கனவே அந்தந்த வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்டதையும் அதனடிப்படையிலேயே புதிய EVM கருவிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும் முகவர்களுக்கு தெரிவிக்க அறிவுறுத்துதல். | --- |
| 4. | Mock Poll முடிவடைந்தவுடன் ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதிவு செய்த வாக்குகளுக்கும் VVPAT ல் இருந்து எடுக்கப்பட்ட Ballot Slips களின் எண்ணிக்கையும் வேறுபடுவதாக முகவர்கள் புகார் செய்தல். | Control Unit-ல் Result Button ஐ அழுத்தி ஒவ்வொரு வேட்பாளர்கள் வாரியாக பதிவாகியுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை குறித்து கொண்டு அதை VVPAT ல் இருந்து எடுக்கப்பட்ட Ballot Slips களின் எண்ணிக்கையுடன் ஒப்புநோக்குமாறு அறிவுறுத்துதல்.<br><br>மேலும் EVM-ஐ ஆன் செய்யும் போது கிடைக்கப்பெற்ற 7-Test Slip களை தனியே எடுத்து வைக்க அறிவுறுத்துதல். மேற்கண்ட வழிகளை பின்பற்றிய பின்னரும் பழுதுகளை நீக்க இயலாத நிலையில் VVPAT கருவியை மட்டும் தனியே மாற்றி வழங்கவும். | EVM கருவியை மாற்றும் பட்சத்தில் வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 5. | வாக்குப்பதிவு மந்தமாக நடைபெறுவதாக தகவல் வரப்பெறுதல் | காலை 7.00 மணிக்கு வாக்குப்பதிவு துவங்கியவுடன் ஓரிரு மணி நேரம் வரை பொதுவாக வாக்குப்பதிவு மெதுவாகவே நடைபெறும். இது வழக்கமான ஒன்றாகும். ஒரே நேரத்தில் PO-1, PO-2 மற்றும் Voting Compartment ஆகியவற்றில் ஒரு வாக்காளர் வீதம் அனுமதிக்கப்படும் பட்சத்தில் வாக்குப்பதிவினை விரைவுபடுத்தலாம் | --- |
| 6. | முறையான வாக்குப்பதிவு துவங்கி சில வாக்குகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் CU/BU-களில் பழுது ஏற்பட்டுள்ளதாக தகவல் பெறுதல் | உடனடியாக வாக்குச்சாவடிக்கு விரைந்து சென்று ஏற்பட்டுள்ள பழுது குறித்த விவரத்தினை Control Unit-ன் திரையில் அறிந்து வட்டாட்சியருக்கு உடன் தெரிவிக்க வேண்டும். நேர்விற்கு ஏற்ப புதிய EVM கருவி தொகுப்பினை (CU+ BU+VVPAT) வழங்கி மாதிரி வாக்குப்பதிவினை நடத்தி, முறையான வாக்குப்பதிவினை மீண்டும் ஆரம்பித்து வைத்தல்.<br><br>பின்னர் பழுதடைந்த EVM-கருவிகள் அனைத்தையும் சீலிட்டு Presiding Officer வசம் வைத்தல். | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 7. | முறையான வாக்குப்பதிவு துவங்கி சில வாக்குகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் VVPAT-ல் பழுது ஏற்பட்டுள்ளதாக தகவல் பெறுதல் | உடனடியாக வாக்குச்சாவடிக்கு விரைந்து சென்று ஏற்பட்டுள்ள பழுது குறித்த விவரத்தினை Control Unit-ன் திரையில் அறிந்து வட்டாட்சியருக்கு உடன் தெரிவிக்க வேண்டும். நேர்விற்கு ஏற்ப புதிய VVPAT கருவியை மட்டும் வழங்கி **மாதிரி வாக்குப்பதிவினை நடத்தாமல்** முறையான வாக்குப்பதிவினை மீண்டும் ஆரம்பித்து வைத்தல்.<br><br>பின்னர் பழுதடைந்த VVPAT-ஐ சீலிட்டு Presiding Officer வசம் வைத்தல். | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |
| 8. | ஒரே நேரத்தில் இரண்டு வாக்குச்சாவடிகளில் EVM பழுது ஏற்பட்டுள்ளதாக தகவல் பெறுதல் | உடனடியாக அருகிலுள்ள முதல் வாக்குச்சாவடிக்கு சென்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மண்டல அலுவலர் மேற்கொள்ள வேண்டும்.<br><br>உதவி மண்டல அலுவலரை அடுத்து வாக்குச்சாவடிக்கு EVM கருவிகளுடன் அனுப்பிட வேண்டும். தேவைப்படின் வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்து வருவாய் ஆய்வாளரை அவ்வாக்குச்சாவடிக்கு உதவிபுரிய அழைக்க வேண்டும். | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 9. | மண்டல அலுவலர் வசம் வழங்கப்பட்டுள்ள 2 (அ) 3 EVM கருவிகளையும் வாக்குச் சாவடிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் காரணமாக மாற்றி வழங்க நேரிடும் பட்சத்தில் | பழுது காரணமாக இரண்டு Reserve EVM தொகுப்புகளை கோருவதற்கான தகவல் வாக்குச்சாவடியிலிருந்து வரப்பெற்றவுடன், உடனடியாக வட்டாட்சியரிடம் தகவல் தெரிவித்து கூடுதல் EVM இயந்திரங்களை வருவாய் ஆய்வாளர் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும். | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |
| 10. | வாக்குச்சாவடியில் வாக்காளரின் அடையாளம்/ ஆவணங்களின் பயன்பாடு தொடர்பாக முகவர்கள் பிரச்சினை எழுப்புவதாகவும் இதனால் வாக்குப்பதிவு தடைபட்டு உள்ளதாகவும் தகவல் வரப்பெறுதல் | வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள கையேட்டின்படி வாக்காளரின் அடையாளம், அனுமதிக்கப்படும் ஆவணங்கள் குறித்து உறுதிப்படுத்த தொலைபேசி மூலம் அறிவுறுத்துதல்<br><br>தேவைப்படின் Challenged Vote முறையை பின்பற்ற அறிவுறுத்துதல்<br><br>எனினும் பிரச்சினை தீராத நிலையில் விரைந்து சென்று அதனை விளக்கி வாக்குப்பதிவினை உடன் துவங்குதல். | வாக்குப்பதிவு தடைபடும் சூழலில் வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 11. | சட்டம் ஒழுங்கு பிரச்சினை காரணமாக வாக்குச் சாவடியில் குழப்பம் ஏற்பட்டு, வாக்குப்பதிவு தடைபட்டுள்ளதாக தகவல் பெறுதல் | உடனடியாக வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்து விரைந்து வாக்குச்சாவடிக்கு சென்று நிலைமைக்கான காரணத்தை அறிந்து விதிகளின்படி அதனை கையாண்டு உடன் வாக்குப்பதிவை துவங்குதல். | வட்டாட்சியர் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் |
| 12. | வாக்குச்சாவடியில் நுழைந்த ஒரு வாக்காளரின் வாக்கு ஏற்கனவே எவரோ ஒருவரால் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்து வாக்காளர் பிரச்சினையை எழுப்புவதாக தகவல் பெறுதல். | தொலைபேசி மூலம் மேற்படி வாக்காளரின் அடையாள ஆவணங்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மூலம் உறுதி செய்து தேவைப்படின் Tendered Ballot Paper வழங்கி வாக்களிக்க செய்ய அறிவுறுத்துதல். | --- |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 13. | வாக்குச்சாவடியில் நுழைந்த ஒரு வாக்காளரின் பெயர் 17A பதிவேட்டில் பதிவு செய்து விரலில் மை வைத்த பின்னர் தனக்கு வாக்களிக்க விருப்பமில்லை என்று கூறுவதாக தகவல் வரப்பெறுதல் | தொலைபேசி மூலம் 17A பதிவேட்டில் மேற்படி வாக்காளரின் குறிப்பு கலத்தில் Refused to Vote or left without voting என்ற குறிப்பினை இட அறிவுறுத்துதல்.<br><br>ஒரு வேளை மேற்கண்ட வாக்காளர் Voter Slip பெற்று அதன்பின் PO-3 அலுவலரிடம் சென்று அதனை வழங்கி அதன்பின் PO-3 அலுவலர் CU-ல் Ballot Switch-ஐ அழுத்திய பின் அவ்வாக்காளர் வாக்களிக்க விருப்பமில்லை எனக்கூறினால் மேற்கண்ட அதே நடைமுறையை பின்பற்றி, பின்னர் அடுத்து வரும் வாக்காளரை CU-ல் Ballot Switch-ஐ அழுத்தாமல் நேரிடையாக வாக்களிக்க அனுமதிக்க அறிவுறுத்துதல். | --- |
| 14. | வாக்குப்பதிவு முழுமையாக முடிவடைந்தவுடன் CU-ல் பதிவான வாக்குகளின் எண்ணிக்கைக்கும் 17A பதிவேட்டில் உள்ள பதிவுகளின் எண்ணிக்கைக்கும் மாறுபாடு உள்ளதாக தகவல் பெறுதல் | பெரும்பாலும் இது மனித பிழையாகவே இருக்கும். இதற்கு 17A பதிவேட்டில் மீண்டும் ஒருமுறை வரிசை எண்களை சரிபார்க்க அறிவுறுத்தவும். தேவைப்படின் Marked Copy of Electoral Roll மற்றும் Voter Slips கட்டுக்கள் எண்ணிக்கையும் சரிபார்க்க அறிவுறுத்தவும். | ---- |

# வாக்குப்பதிவின் போது எதிர்நோக்கப்படும் பிரச்சனைகள் மற்றும் தீர்வு

| வ. எண் | பிரச்சினைக்குரிய சூழல்கள் | மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் | தகவல் தெரிவிக்க வேண்டிய அலுவலர் விவரம் |
|---|---|---|---|
| 15. | ஒரு வாக்காளர் வாக்களித்த வேட்பாளரின் விவரத்திற்கும், VVPAT கருவியில் தெரியும் வேட்பாளரின் விவரத்திற்கும் வேறுபாடு இருப்பதாக வாக்காளர் புகார் தெரிவிப்பதாக தகவல் பெறுதல். | இந்நேர்வில் அவ்வாக்காளருக்கு முன்பு வரை எந்த ஒரு வாக்காளரும் புகார் தெரிவிக்கவில்லை என்பதை தெரிவித்து தேவைப்படின் விதி எண். 49MA-ன்படி அவரிடமிருந்து ஒரு உறுதிமொழியை பெற்றுக் கொண்டு Polling Agents முன்னிலையில் ஒரு Test Vote வாக்களிக்க செய்ய அறிவுறுத்தவும். அதில் வாக்காளரின் புகார் தவறு எனத் தெரியவருமாயின் காவல்துறையிடம் ஒப்படைக்கவும் அல்லது வாக்காளர் புகார் உறுதி செய்யப்பட்டால் VVPAT கருவியை மாற்றி புதிய கருவியை வழங்கவும். | வட்டாட்சியர் (அ) தேர்தல் நடத்தும் அலுவலர் |

# வாக்குப்பதிவு முடிவுற்ற பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

- வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் வாக்குப்பதிவு இயந்திரத்தினை உரிய முறையில் சரியாக அரக்கு முத்திரை இடப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி தேர்தல் முடிந்தமைக்கான பதிவு படிவம் 17A - னை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.
- தேர்தல் முடிந்தபின், வாக்குச்சாவடி வாரியாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் படிவம்- VIII-ல் தாக்குதலுக்குள்ளாகக்கூடிய வாக்குச்சாவடிகளின் மக்கள் தொகையில், வாக்களித்த வாக்காளர்கள் விபரத்தினை சிறப்பு அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும்.
- வாக்குச்சாவடியில் தலைமை தேர்தல் அலுவலர் தன்னுடைய நாட்குறிப்பு படிவத்தை சரியாக பூர்த்தி செய்துள்ளாரா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

# வாக்குப்பதிவு முடிவுற்ற பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

- வாக்குச்சாவடி தலைமை தேர்தல் அலுவலர், தேர்தல் பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டிய கூடுதல் அறிக்கை படிவம் - XV-ல் சரியாக பூர்த்தி செய்துள்ளாரா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- ரோந்து செல்லும் குழுவுடன் (Mobile Party) இணைந்து செயல்பட்டு, மண்டல அலுவலர் வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், சட்ட முறைமையான ஆவணங்கள் (Statutory Documents) மற்றும் சட்ட முறைமையற்ற ஆவணங்களை (Non Statutory Documents) ஆகியவற்றை பாதுகாப்பாக அவைகளை பெறும் மையத்தில் (Reception Centre) ஒப்படைக்க வேண்டும்.

# வாக்குப்பதிவு முடிவுற்ற பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

## வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பொருட்களை பெறும் போது கவனிக்க வேண்டிய இனங்கள்

### கையில் தனியாக பெறப்பட வேண்டியவை ( 10-பொருட்கள்)

1. Control Unit-1,
2. Ballot Unit or Units
3. VVPAT-1 ( Battery அகற்றிய பிறகு)
4. முறையான வாக்குப்பதிவின் போது பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த EVM-கள்
5. சிறிய காகித உறையில் இடப்பட்ட Web Casting Memory Card (உறையில் AC Name, PS No குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்)
6. VVPAT Battery
7. 17C படிவம்-2
8. Observer Scrutiny Report
9. Presiding Officer's Declaration on Commencement of Poll and Closure of Poll.
10. Mock Poll Slips சீலிடப்பட்ட Plastic Box.

# வாக்குப்பதிவு முடிவுற்ற பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

| மஞ்சள் நிற Non- Statutory Cover-ல் பெறப்பட வேண்டியவை (11-பொருட்கள்) | பழுப்பு நிற Non- Statutory Cover-ல் பெறப்பட வேண்டியவை (8-பொருட்கள்) |
|---|---|
| 1. குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் தவிர இதர வாக்காளர் பட்டியல்கள் (Other than the Marked Copy) | 1. வாக்குச்சாவடி தலைமை அலுவலர் கையேடு |
| 2. வாக்குச்சாவடி முகவர் நியமன கடிதங்கள் (படிவம்-10), | 2. EVM-இயந்திர கையேடு |
| 3. தேர்தல் பணிச்சான்று (EDC) (படிவம்-12B) | 3. Indelible Ink bottle. |
| 4. எதிர்க்கப்பட்ட வாக்குகளின் பட்டியல் (Challenged Votes) (படிவம்-14) | 4. Stamp Pad |
| 5. கண்பார்வையற்ற,நலிவுற்ற வாக்காளர்களின் பட்டியல் மற்றும் உறுதிமொழிகள்(படிவம்-14A) | 5. Metal Seal |
| 6. Cover containing the declarations obtained from electors as to their age and list of such electors. | 6. Arrow Cross – Mark Rubber Stamp |
| 7. Cover Containing the receipt book for the cash if any in respect of Challenged Vote. | 7. Cup for setting the indelible Ink |
| 8. Cover containing the Unused and Damaged Paper Seal. | 8. Distinguish Mark Rubber Stamp |
| 9. Cover containing the Unused and Damaged Strip Seal | |
| 10. Cover containing the Unused Voter Slips. | |
| 11. Cover containing the Unused and Damaged Special Tag and Unused and damaged Strip Seal. | |

# வாக்குப்பதிவு முடிவுற்ற பின்பு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்

| வெள்ளை நிற Master Cover-ல் பெறப்பட வேண்டியவை ( 3-பொருட்கள்) | பச்சை நிற Statutory Cover-ல் பெறப்பட வேண்டியவை ( 5-பொருட்கள்) |
|---|---|
| 1. வாக்குச்சாவடி தலைமை அலுவலரின் நாட்குறிப்பு<br>2. பார்வையாளர் பதிவேடு<br>3. படிவம் 17C நகல்-1 | 1. வாக்காளர் பட்டியலின் குறியீட்டு நகல் (Marked Copy of Electoral Roll)<br>2. வாக்காளர்கள் பதிவேடு (17A register)<br>3. பயன்படுத்தப்பட்ட வாக்காளர் சீட்டுகள் (Used Voters Slip).<br>4. பயன்படுத்தப்பட்ட ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளும், (Used Tendered Ballot) படிவம்-17B-ல் உள்ள ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகளின் பட்டியலும்<br>5. பயன்படுத்தப்படாத ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டுகள் (Unused Tendered Ballot) |

**இதர பொருட்கள் அனைத்தும் நீல நிற Non- Statutory Cover-ல் பெறப்பட வேண்டும்**

# கோவிட் - 19 தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள்

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு வாக்காளர்கள் மற்றும் வாக்குச்சவடி அலுவலர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய இரண்டு பெட்டககங்கள் (சிறியது மற்றும் பெரியது) உள்ளன.

| சிறிய பெட்டகம் | பெரிய பெட்டகம் |
|---|---|
| 1. Infrared Thermo Meter with additional Battery (1 No)<br>2. Hand Sanitizer (500ml) (6 Nos)<br>3. Hand Sanitizer (100ml) (10 Nos)<br>4. Face Shield (10 Nos)<br>5. Surgical Face Mask (3Ply)(85 Nos)<br>6. Single Use Rubber Gloves (30 Nos)<br>7. LDPE Bag for Packaging (5 Nos)<br>8. 'D' Cut Bags (1 No)<br>9. Disposable Polythene Hand Gloves (Based on Electors) | 1. PPE Kit (12 Nos) |

# கோவிட் - 19 தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள்

- மேலும், 70 லிட்டர் கொள்ளளவு கொண்ட **Bio Medical Waste Bin** உடன் வழங்கப்படும்.
- வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள இரண்டு தன்னார்வலர்களில் ஒருவர் வாக்குச்சாவடிகளில் நுழையும் அனைத்து வாக்காளர்களுக்கும் **Infrared Thermo Meter** மூலம் வெப்ப நிலையை ஆய்வு செய்து, **Hand Sanitizer (500ml)** மூலம் **Spray** செய்யப்பட வேண்டும்.
- மற்றொருவர், வாக்குச்சாவடி நுழைவு வாயிலில் முக கவசம் அணியாமல் வரும் வாக்காளர்களுக்கு முக கவசம் வழங்கப்பட வேண்டும்.
- அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்கு செலுத்தும் முன் பயன்படுத்தும் கையில் (ஒரு கைக்கு மட்டும்) வாக்குச்சாவடி அலுவலரால் **Disposable Polythene Hand Gloves** வழங்க வேண்டும் அதை வாக்கு செலுத்திய பிறகு **Bio Medical Waste Bin**-இல் போட வேண்டும்.

# வாக்கு எண்ணிக்கை மையம் விவரம்

| Sl. No. | No. & Name of the Assembly Constituency | Location of Counting Centre | Location of Counting Halls |
|---|---|---|---|
| 1. | 001. Gummidipoondi | Sriram Vidhya Mandir Matric Higher Secondary School, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Second Floor West and South Wing |
| 2. | 002. Ponneri | Sriram Vidhya Mandir Matric Higher Secondary School, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Second Floor North and East Wing |
| 3 | 003.Titrutani | Sriram Arts and Science College, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Second Floor North and South Wing |
| 4. | 004.Tiruvallur | Sriram Arts and Science College, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | First Floor North and South Wing |
| 5. | 005.Poonamallee | Sriram Vidhya Mandir Matric Higher Secondary School, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | First Floor South and East Wing |
| 6. | 006.Avadi | Sriram Vidhya Mandir Matric Higher Secondary School, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Ground Floor West and South Wing |
| 7. | 007.Maduravoyal | Sriram Polytechnic college, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | First Floor South and East Wing |
| 8 | 008.Ambathur | Sriram Polytechnic college, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Ground Floor South and East Wing |
| 9 | 009.Madhavaram | Sriram Polytechnic college, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Second Floor South and East Wing |
| 10 | 010.Tiruvotriyur | Sriram Polytechnic college, No.89, Perumalpattu, Tiruvallur Taluk and District. | Second Floor North and West Wing |